செய்தி வெளியீடு எண். 47-2017 நாள்: 27.01.2017

# விழுப்புரம் மாவட்டம் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் புதியதாக பதிவு செய்ய வரும் பதிவுதாரர்கள் மற்றும் முகவரி மாற்றம் கோரும் பதிவுதாரர்களுக்கு புதிய ஆவணங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் அறிவித்துள்ளார்.

*****

வேலைவாய்ப்பு அலுவலகங்களில், புதிய பதிவு செய்தல், முகவரி மாற்றம் மற்றும் மாவட்டம் விட்டு மாவட்டம் பதிவு மாற்றம் ஆகிய பணிகளுக்கு தேவையான தனி நபர் சான்றாக/ முகவரி சான்றாக (Proof of Identity, Proof of Address) குடும்ப அடையாள அட்டை (ரேஷன் கார்டு) மட்டுமே ஏற்கப்பட்டு வந்தது.

அரசாணை (நிலை) எண்.244, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ட்டி2)-த்துறை நாள்:09.12.2016 வாயிலாக வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்திட தனிநபர் சான்றாக/ முகவரி சான்றாக குடும்ப அடையாள அட்டை மட்டுமின்றி, ஆதார் அட்டை, நிலையான கணக்கு அட்டை (PAN Card), வாக்காளர் அட்டை, ஓட்டுநர் உரிமம், கடவுச்சீட்டு (Passport), முன்னாள் படை வீரர்களுக்கான அடையாள அட்டை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை ஆகிய அரசு ஆவணங்களை சமர்ப்பிக்கலாம் என ஆணையிடப்பட்டுள்ளது.

அரசாணையினைத் தொடர்ந்து, விழுப்புரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் புதியதாக பதிவு செய்ய வரும் பதிவுதாரர்கள் மற்றும் முகவரி மாற்றம் கோரும் பதிவுதாரர்கள், தனி நபர் சான்றாக/ முகவரி சான்றாக (Proof of Identity, Proof of Address) மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு அரசு ஆவணத்தினை ஆதாரமாக காண்பித்து, தங்களது கல்வி சான்றிதழ்கள் மற்றும் முகவரி மாற்றத்தினை பதிவு செய்து கொள்ளலாம்.

மேலும், ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்கு பதிவு மாற்றம் கோரும் நேர்வில் குடிப்பெயர்ச்சி சான்றிதழ், இருப்பிடச்சான்று மற்றும் புதிய அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு அரசு ஆவணத்தை ஆதாரமாக காண்பித்து விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.